# முதல்வருடன் - கவிப்பேரரசு வைரமுத்து சந்திப்பு!



சென்னை, ஆக.14-

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களை, நேற்று அவரது இல்லத்தில் கவிப்பேரரசு வைரமுத்து அவர்கள் சந்தித்து உரையாடினார்.

இச்சந்திப்பு குறித்து கவிப்பேரரசு வைரமுத்து அவர்கள், வலைதளங்களில் வெளியிட்ட பதிவு வருமாறு:-

**"தமிழ்நாட்டு முதலமைச்சர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று மரியாதை நிமித்தமாகச் சந்தித்தேன்.**

**கலை, அரசியல் நாட்டு நலம், உடல்நலம் குறித்துப் பூவோடு காற்றைப்போல் உரையாடினார்.**

**அளவான உடல்மொழி, பழி சொல்லாத பண்பாடு, மொழியோ கோயில் மணி, மொழிவதில் கலைஞர் தொனி; இருவர்க்கும் நிறைவு தருவதே சந்திப்பின் பூரணம் உணர முடிந்தது!"**

இவ்வாறு அப்பதிவில் கவிப்பேரரசு வைரமுத்து குறிப்பிட்டுள்ளார்.

## ரஷியாவில் வெள்ளம்!

மாஸ்கோ,ஆக.14-

ரஷியாவின் கிழக்கில் ஏற்பட்டுள்ள வெள்ளத்தால் 2 ஆயிரத்துக்கும் அதிகமானோர் பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேற்றப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

ரஷியாவின் கிழக்குப் பகுதிகளில் கனமழை பெய்து வருகிறது. முன்னதாக இந்த வாரத்தின் தொடக்கத்தில் கனுான் புயல் ஜப்பானுக்கு கனமழையை கொடுத்தது. பின்னர், அந்த புயல் கொரிய தீபகற்பம் நோக்கி நகர்ந்தது.

ரஷியாவின் கிழக்கு பகுதியில் கனமழை பெய்து வருகிறது. கனமழையால் வெள்ளம் ஏற்பட்டுள்ளதால் 405 குழந்தைகள் உள்பட 2 ஆயிரத்துக்கும் அதிகமானோர் பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேற்றப்பட்டனர்.



திருநெல்வேலி மாவட்டம் பாளையங்கோட்டை அரசு பல்நோக்கு மருத்துவமனையில், நான்குநேரி பகுதியில் சக மாணவர்களால் பாதிக்கப்பட்டு, காயமடைந்து சிகிச்சை பெற்று வரும் அண்ணன், தங்கையை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைத்தலைவர் மு.அப்பாவு, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் திருமதி.என்.கயல்விழி செல்வராஜ், மாவட்ட ஆட்சித்தலைவர் கா.ப.கார்த்திகேயன், திருநெல்வேலி நாடாளுமன்ற உறுப்பினர் சா.ஞானதிரவியம் , பாளையங்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மு.அப்துல் வகாப் , நாங்குநேரி சட்டமன்ற உறுப்பினர் ரூபி.ஆர்.மனோகரன், திருநெல்வேலி மாநகராட்சி மேயர் பி.எம்.சரவணன் , முன்னாள் சட்டமன்ற பேரவைத் தலைவர் இரா.ஆவுடையப்பன், ஆகியோர் முன்னிலையில், நேரில் சென்று ஆறுதல் கூறினார்கள்.

### ப.தாயகம்கவி, எம்.எல்.ஏ. முயற்சியால் - திரு.வி.க.நகர் தொகுதி

# அருந்ததியர் நகரில் குடிநீர்ப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு!

### அமைச்சர் பி.கே.சேகர்பாபு பணியினை தொடங்கி வைக்கிறார்!

சென்னை, ஆக.14-

முதலமைச்சர் அவர்களுடைய திராவிட மாடல் ஆட்சியில் நடைபெற்று வருகின்ற மக்கள் நலத்திட்டங்களில் மேலும் ஒரு சாதனையாக திரு.வி.க.நகர் சட்டமன்ற தொகுதியில் அருந்ததியர் நகர் பகுதியில் பல ஆண்டு காலமாக தீர்க்கப்படாமல் இருந்த குடிநீர் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காணப்பட்டுள்ளது. சென்னை கிழக்கு மாவட்ட செயலாளர் - இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு (இன்று 14.08.2023 திங்கட்கிழமை ) காலை 9 மணிக்கு இந்த பணியினை தொடங்கி வைக்கிறார்.

தமிழ்நாடு சட்டமன்ற வளாகத்தில் உள்ள கூட்ட அரங்கத்தில் கடந்த 17-04-2023 அன்று இன்றைய தொழில்துறை அமைச்சரும், அன்றைய மதிப்பீட்டு குழுவின் தலைவருமான டி.ஆர்.பி.ராஜா தலைமையில் மதிப்பீட்டுக் குழு கூட்டம் நடைபெற்றது. அனைத்து துறை சார்ந்த உயர் அதிகாரிகள் பங்கேற்ற அக்கூட்டத்தில் மதிப்பீட்டு குழுவின் உறுப்பினராக இருந்த கழக துணை அமைப்பு செயலாளரும், திரு.வி.க.நகர் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினருமான வழக்கறிஞர் ப.தாயகம்கவி திரு.வி.க.நகர் தொகுதி வார்டு எண் 71-ல் அமைந்துள்ள மேட்டுப்பாளையம் அருந்ததியர் நகர் பகுதியில் உள்ள செங்கன் தெரு, கந்தன் தெரு, வீரராகவன் தெரு, கோவிந்தன் தெரு, கோவிந்தபுரம், போலேரியம்மன் கோவில் தெரு, தாசரி தெரு, எலிகன் தெரு, பங்காரு தெரு, ரங்கப்பன் தெரு, வரதப்பன் தெரு பெரியபாளையத்தம்மன் கோவில் தெரு உப்பண்டிபாபு லேன், சின்னையா லேன், பிச்சாண்டி தெரு ஆகிய தெருக்களில் குடிநீரில் கழிவு நீர் கலந்து வருவதை சரி செய்து அப்பகுதியில் வசித்து வருகின்ற மக்களுக்கு சுகாதாரமான குடிநீர் கிடைக்கின்ற வகையில் உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்கிற கோரிக்கையை முன் வைத்தார். கோரிக்கையினை விரைந்து நிறைவேற்றிட வேண்டும் என்று மதிப்பீட்டு குழு குறிப்பாணை வழங்கியதை தொடர்ந்து நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் செயலாளர்,சென்னை குடிநீர் மற்றும் கழிவு நீரகற்றல் வாரியத்தின் மேலாண்மை இயக்குனர் ஆகியோரால் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு திரு.வி.க.நகர் தொகுதி அருந்ததியர் நகர் பகுதியில் மேற்குறிப்பிட்ட தெருக்களில் சென்னை குடிநீர் வாரியத்தின் மேற்பார்வை பொறியாளர், பகுதி பொறியாளர்-6.துணை பகுதி பொறியாளர் மற்றும் பணிமனை 71-ன் உதவி பொறியாளர் உள்ளிட்ட அதிகாரிகளால் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது.

அந்த அறிக்கையின் அடிப்படையில் 8,390 மக்கள் தொகையும், 400 குடிநீர் குழாய் இணைப்புகள் உள்ள அந்தப்பகுதியில் குடிநீர் தரத்தின் நிலைTDS (total dissolved solids) - 500 ppm-க்கும் குறைவாக இருக்குமாறு பராமரிக்கப்பட்டு குடிநீர் வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. மேலும், கடந்த 25 வருடங்களுக்கு முன்பாக அமைக்கப்பட்ட குடிநீர் குழாய்கள் என்பதால் அவை முற்றிலும் பழுதடைந்து விட்டது. எனவே, பழைய குடிநீர் குழாய்களை அகற்றிவிட்டு புதிய குடிநீர் குழாய்கள் அமைப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு 4.02 கோடி திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டு அதனை தொடர்ந்து ஒப்பந்த புள்ளி கோரப்பட்டு பணியானை வழங்கப்பட்டிருக்கிறது. கொரோனா காலகட்டத்திற்குப் பின் உலக அளவில் பொருளாதார வீழ்ச்சி அடைந்த நிலையிலும் கழகத்தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான திராவிட மாடல் ஆட்சி பொறுப்பேற்றவுடன் மக்களின் நலனில் அக்கறை கொண்டு மக்களுக்காக பல்வேறு நலத்திட்டங்களை அறிமுகப்படுத்தி செயல்படுத்தி வரும் நிலையில், திரு.வி.க. நகர் தொகுதியிலும் மக்களுக்கு தூய்மையான குடிநீர் வழங்க நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணி தொடங்கப்படுவதற்கான பணியானை வழங்கப்பட்டு விரைவில் புதிய குழாய் பதிக்கப்படும் பணி தொடங்கவுள்ளது. அரசு மதிப்பீட்டு குழு கூட்டத்தில் அக்குழுவின் உறுப்பினர் என்கிற நிலையில் திரு.வி.க.நகர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வழக்கறிஞர் ப.தாயகம்கவி அவர்கள் வைத்த கோரிக்கையை கனிவுடன் பரிசீலனை செய்த தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 25 ஆண்டுகளுக்கு முன்பாக பாதிக்கப்பட்ட பழைய குழாய்களை அகற்றிவிட்டு எதிர்காலத்தில் எந்த பழுதும் ஏற்படாதவாறு புதிய குடிநீர் குழாய்கள் அமைக்குமாறு உத்தரவிட்டிருக்கிறார்.


இன்று நடைபெறுகிறது!

## காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக்கழக அவசர பொது உறுப்பினர்கள் கூட்டம்!



மாவட்டச் செயலாளர் - அமைச்சர் தா.மோ.அன்பரசன் அறிவிப்பு!

காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.கழக அவசர பொது உறுப்பினர்கள் கூட்டம் இன்று (14.8.2023– திங்கட்கிழமை) மாலை 4.00 மணியளவில் திருப்போரூர் வடக்கு ஒன்றியம், மாம்பாக்கத்தில் மேடவாக்கம் சாலையில் அமைந்துள்ள விக்னேஷ் மகால் திருமண மண்டபத்தில் மாவட்ட கழக அவைத்தலைவர் த.துரைசாமி அவர்கள் தலைமையிலும், மாவட்டக் கழக துணைச் செயலாளர்கள், இ.கருணாநிதி, எம்.எல்.ஏ., வரலட்சுமி மதுசூதனன், எம்.எல்.ஏ., து.மூர்த்தி, மற்றும் மாவட்ட கழக பொருளாளர் வெ.விசுவநாதன் ஆகியோர் முன்னிலையிலும் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் கழக நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயற்குழு பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர பகுதி ஒன்றிய நகர பேரூர் கழகச் செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், மாவட்டக் கழக பிரதிநிதிகள், கழக அணிகளின் மாநில நிர்வாகிகள் மாவட்ட மாநகர பகுதி ஒன்றிய நகர பேரூர் கழக அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி மன்றப் பிரதிநிதிகள் மற்றும் சிறப்பு அழைப்பாளர்கள் உள்ளிட்ட அனைவரும் இதனையே அழைப்பாக ஏற்று தவறாமல் கலந்துக்கொண்டு சிறப்பிக்கும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

**பொருள் :** வருகிற 21.8.2023 அன்று நெம்மேலியில் கடல்நீரைக் குடிநீராக்கும் திட்டத்தைத் துவங்கி வைக்க மாண்புமிகு முதல்வர் – தலைவர் தளபதி வருகை, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா, கழக வளர்ச்சிப் பணிகள்

**அமைச்சர் தா.மோ.அன்பரசன்,**
செயலாளர்,
காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க.





# தி.மு.க. இளைஞர் அணி

**ஒன்றிய – நகர – பகுதி – பேரூர் அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் பொறுப்புகளுக்கான நேர்காணல்**

இளைஞர் அணி செயலாளர் **உதயநிதி ஸ்டாலின்** அறிவிப்பு

ஒன்றிய – நகர – பகுதி – பேரூர் அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் பொறுப்புகளுக்கு அனைத்து கழக மாவட்டங்களில் இருந்து விண்ணப்பங்கள் வந்துள்ளன. அதில் மண்டலம் 1–ல் உள்ள சென்னை கிழக்கு, சென்னை மேற்கு மற்றும் சென்னை வடக்கு மாவட்டங்களிலிருந்து மேற்கண்ட பொறுப்புகளுக்கு விண்ணப்பித்தவர்கள் வரும் 15–ம் தேதி (செவ்வாய்க்கிழமை) காலை 10.00 மணிக்கும், சென்னை தெற்கு, சென்னை வடகிழக்கு மற்றும் சென்னை தென்மேற்கு மாவட்டங்களிலிருந்து மேற்கண்ட பொறுப்புகளுக்கு விண்ணப்பித்தவர்கள், வரும் 16–ம் தேதி (புதன்கிழமை) காலை 10.00 மணிக்கும், அன்பகத்தில் நடைபெறும் நேர்காணலில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**மண்டலம்–1**

**நேர்காணல் தேதி : 15.08.2023**

| வ.எண் | கழக மாவட்டம் |
|---|---|
| 1 | சென்னை கிழக்கு |
| 2 | சென்னை மேற்கு |
| 3 | சென்னை வடக்கு |

**நேர்காணல் தேதி : 16.08.2023**

| வ.எண் | கழக மாவட்டம் |
|---|---|
| 1 | சென்னை தெற்கு |
| 2 | சென்னை வடகிழக்கு |
| 3 | சென்னை தென்மேற்கு |

நேர்காணலில் கலந்துகொள்ள வரும் விண்ணப்பதாரர்கள் ஒவ்வொருவரும் தங்களுடைய வயதை நிரூபிப்பதற்கான கல்விச் சான்றிதழ், ஆதார் அட்டை, கழக உறுப்பினர் அட்டை, இளைஞர் அணி போன்ற கழக அமைப்புகளில் ஏற்கெனவே பணியாற்றியிருந்தால், அதுதொடர்பான புகைப்படத் தொகுப்பு மற்றும் ஆவணங்களைக் கொண்டு வருமாறு கேட்டுக் கொள்கிறோம்.

அனைவருக்கும் வாழ்த்துகள்!

"அன்பகம்"
சென்னை – 18.
நாள் : 13–08–2023.

**உதயநிதி ஸ்டாலின்**
செயலாளர், தி.மு.க. இளைஞர் அணி



3ஆம் ஆண்டு புகழ் வணக்கம்
11.3.1930
14.8.2020

# ஏ.கே.ஜெகதீசன் Ex.MC

தலைமைச் செயற்குழு உறுப்பினர், பகுதிக் கழகச் செயலாளர்
சேப்பாக்கம் பகுதி (1977 – 2000), கலைஞர் விருது – 2019



எத்தனைக் கோடிகள் தந்தாலும் – பகை
எத்தர்கள் கூடியே வந்தாலும் – நாளும்
முத்தானக் கழகத்தைக் காத்தாரே – அவர்
மேப்பிலலாக் காற்றைப்போல் வாழ்வாரே!

நினைவுகளுடன்

**A.K.J.இளஞ்செழியன் M.A.,M.Phil**
இணை இயக்குநர், பொருளியல் - புள்ளியியல் துறை

**குடும்பத்தினர் – கழகத்தினர்**